(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 406.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2014 ஒற்றோபர் 31, வெள்ளிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3324/ '12

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் நாட்டில் பதிவு செய்யப்பட்ட பயணிகள் கார்கள், வேன்கள், லொறிகள், முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை தனித்தனியாக இச்சபையில் அவர் தெரிவிப்பாரா?

(ஆ) பதிவுத் திகதியின் அடிப்படையில் பின்வரும் வகைகளின் கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பிரிவிலும் தற்போது காணப்படும் வாகனங்களின் எண்ணிக்கையை அவர் கூறுவாரா?

(i) இரண்டு வருடங்களுக்கு குறைந்தவை

(ii) 2 - 5 வருடங்கள் வரை

(iii) 5 - 10 வருடங்கள் வரை

(iv) 10 - 20 வருடங்கள் வரை

(v) 20 வருடங்களுக்கு மேல்

(இ) மேற்படி 'அ' வில் குறிப்பிடப்பட்டுள்ள வருடங்களில் வினியோகித்த வாகன வருமான உத்தரவுப் பத்திரம் மூலம் அரசாங்கத்தினால் அல்லது மாகாண சபையினால் ஈட்டப்பட்ட வருமானம் எவ்வளவு என்பதையும் அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4087/ '13

2.

கௌரவ புத்திக பத்திரண,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அஞ்சல் அலுவலக வலையமைப்புக் கருத்திட்டத்திற்காக அலுவலகமொன்று பேணிவரப்படுகின்றதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், அவ்வலுவலகத்தில் சேவையாற்றுகின்ற பதவியணியினரின் பெயர்கள், முகவரிகள், பதவிகள் மற்றும் அவர்களின் கல்வி மற்றும் பிற தகைமைகள் யாவை;

(ii) அப்பதவியணிக்காக அவ்வலுவலகம் ஆரம்பிக்கப்பட்ட தினத்தில் இருந்து இற்றைவரை செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் தனித்தனியாக யாவை

என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) அஞ்சல் அலுவலக வலையமைப்புக் கருத்திட்டத்தின் ஆலோசனைப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர் யாது;

(ii) இக்கருத்திட்டத்திற்கான கணனி வன்பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக இற்றைவரை செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(iii) அக்கருத்திட்டத்தின் மென்பொருள்களைத் தயாரிக்கும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனம் யாது;

(iv) இற்றைவரை மென்பொருள்களைத் தயாரிப்பதற்காக அந்நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4422/ '13

3.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முத்துராஜவெல சரணாலயத்தில் செயற்படுகின்ற "பாம் ஒயில்" உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களின் கீழ் உள்ள தொழிற்சாலைகளின் சுற்றாடல் அறிக்கைகளை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி தொழிற்சாலைகளின் கழிவுகள் அகற்றப்படுகின்ற இடங்கள் யாவையென்பதையும்;

(iv) இந் நிறுவனங்கள் தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புகள் முன்வைக்கப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4467/ '13

4.

கௌரவ அனுர திஸாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்காவின் இலங்கை தூதரகம் Patton Boggs எனும் கம்பனியுடன் கொடுக்கல் வாங்கல் மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றுள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) மேற்படி கொடுக்கல் வாங்கல் மூலமாக நிறைவேற்றப்பட்டுள்ள பணி அல்லது பணிகள் யாவையென்பதையும்;

(iv) அதன் மூலம் கிடைத்துள்ள நன்மைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுப்பனவுகளின் பெறுமதி யாதென்பதையும்;

(vi) அதற்காக நிதி ஒதுக்கப்பட்ட செலவுத் தலைப்பு யாதென்பதையும்;

(vii) மேற்படி கம்பனிகளுடன் உடன்படிக்கைகள் கைசாத்திடப்பட்டிருப்பின், அந்த உடன்படிக்கைகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில்அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4675/ '13

5\.

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் அரசாங்க வைத்தியசாலைகளில் சிகிச்சைபெறுகின்ற ஒட்டுமொத்த HIV தொற்றுள்ளவர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி எண்ணிக்கை மாவட்டவாரியாக தனித்தனியாக எவ்வளவு;

(iii) அரசாங்க வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகின்ற HIV தொற்றுள்ளவர்களின் ஆளடையாளத்தை பாதுகாப்பதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சமூகப் பிரச்சினைகள் காரணமாக HIV தொற்றுள்ளவர்கள் சிகிச்சை பெறாமல் இருக்கின்றனரென்பதை அறிவாரா;

(ii) அத்தகைய நோயாளிகளை இனங்கண்டு சிகிச்சையளிக்கும் வேலைத்திட்டமொன்று உள்ளதா;

(iii) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் யாது;

(iv) HIV தொற்றுள்ளவர்களின் பிரத்தியேகத்தன்மை பாதுகாக்கப்படத்தக்க வகையில் அதனோடு சம்பந்தப்பட்ட பரிசோதனைகளை மேற்கொள்ளக்கூடிய இடங்கள் உள்ளனவா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கையின் தனியார் வைத்தியசாலைகளில் HIV தொற்றுள்ளவர்களுக்கு சிகிச்சையளிக்கப்படுகின்றதா;

(ii) ஆமெனில், HIV தொற்று பரவுவதைக் குறைப்பதற்காக மேற்படி வைத்தியசாலைகளில் உள்ள வசதிகள் சுகாதார திணைக்களத்தின் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றதா;

(iii) வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடமிருந்து HIV தொற்றுவதைத் தடுக்க அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4772/ '14

6\.

கௌரவ அசோக் அபேசிங்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகளுக்காக ஒருங்கிணைந்த நேரசூசி முறையொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகளின் எண்ணிக்கையானது தனியார் பேருந்துகளின் எண்ணிக்கையை விட குறைவாக உள்ளதால் மேற்படி ஒருங்கிணைந்த நேரசூசி முறையின் மூலம் பாரதூரமான நட்டம் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு ஏற்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், இலங்கை போக்குவரத்துச் சபைக்கு ஏற்படுகின்ற நட்டத்தை தவிர்த்துக்கொள்வதற்காக ஏதேனும் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4943/ '14

7\.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச நிறுவனங்களுக்கு கடன் வழங்கியுள்ள அரச மற்றும் அரச சார்பற்ற வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டின் இன்றுவரை கடன் பெற்றுள்ள அரச நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) மேற்படி (அ) இன் பிரகாரம் கடன் பெற்றுள்ள ஒவ்வொரு நிறுவனத்தினதும் பெயர் (அமைச்சு, திணைக்களம், அரச கூட்டுத்தாபனம் மற்றும் வேறு நிறுவனங்கள்), கடன் வழங்கிய நிறுவனத்தின் பெயர் (வங்கி/நிதி நிறுவனம்), பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் அளவு, கடன் பெற்றமைக்கான காரணம் அல்லது தேவைப்பாடு உள்ளடங்கிய பட்டியலொன்றையும் அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) அரச நிறுவனங்களுக்கு மேலே கூறப்பட்டவாறு கடன் வழங்கும் போது அறவிடப்படும் வட்டி வீதம் எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வட்டி வீதம், கடன் பெற்றுக்கொள்ளப்படும் காரணத்தின் அடிப்படையில் வேறுபடுகின்றதா என்பதையும்

(iii) ஆமெனின், இவ்வேறுபாடுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5070/ '14

8\.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பு நகரில் காணப்படுகின்ற வாகன நெரிசலை குறைப்பதற்காக நகர் பிரதேசங்களை உள்ளடக்குகின்ற வகையில் புகையிரத பாதைக் கட்டமைப்பை விரிவுப்படுத்தி புதிய புகையிரதச் சேவையொன்றை ஆரம்பிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) இன்றளவில் அரசாங்கத்தினாலோ அல்லது அரசாங்கத்துடன் தொடர்புடைய நிறுவனங்களினாலோ அதற்கேற்புடைய மதிப்பாய்வுகள் அல்லது ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி மதிப்பாய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகள் மூலம் வழங்கப்பட்டுள்ள விதப்புரைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5085/ '14

9.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு ,— (1)

(அ) (i) கிளிநொச்சி, நாச்சிகுடா, அன்னை வேளாங்கன்னி கிராமத்தில் வசிக்கின்ற 147 குடும்பங்களைச் சேர்ந்தவர்களில் ஏறக்குறைய 200 பேர் கடற்றொழிலில் ஈடுபட்டள்ளனரென்பதையும்;

(ii) இக்கிராமத்திற்கு மீன்பிடி படகுத்துறையொன்று இல்லையென்பதையும்;

(iii) மீன்பிடி படகுத்துறையொன்று இன்மையால் அந்த மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கிராமத்தில் வசிக்கின்ற மீனவர்களின் நலனுக்காக துரிதமாக மீன்பிடி படகுத்துறையொன்றை அமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3325/ '12

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் வரவு செலவுத் திட்ட உரைகளினூடாக ஊடகவியலாளர்களுக்கு பிரேரிக்கப்பட்ட நன்மைகளையும்;

(ii) அவ்வறில், 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய நன்மைகளையும்;

(iii) மேற்சொன்ன நன்மைகளின் மொத்தப் பெறுமதியையும்

அவர் கூறுவாரா?

(ஆ) கார் கடன்கள் வழங்கப்பட்ட ஊடகவியலாளர்களின் பெயர்களை அவர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் ஊடக நிறுவனத்துடன் அவர் மேலும் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4089/ '13

11.

கௌரவ புத்திக பதிரண,— கடற்றொழில், நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெலிகம தேர்தல் தொகுதியின் கப்பறதொட்ட பிரதேசத்தில் பெருமளவு மீனவர்கள் பன்னாட் கலங்கள் மற்றும் ஒருநாட் கலங்கள் மூலமாக மீன்பிடித்தொழிலுக்காக கடலுக்குச் செல்கின்றனரென்பதையும்;

(ii) அப்பிரதேசத்தில் மீன்பிடித்துறைமுகமோ நங்கூரத்தளமோ இன்மையால் மீனவர்கள் பல்வேறு வசதியீனங்களை எதிர்நோக்குகின்றனரென்பதையும்

அவர்அறிவாரா?

(ஆ) (i) துறைமுகமோ நங்கூரத்தளமோ இன்மையால் கப்பறதொட்ட பிரதேச மீனவர்கள் எதிர்நோக்கியுள்ள சிரமமான நிலைமையைத் தவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

(ii) ஆமெனில், அத்திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4577/ '13

12.

கௌரவ அனுர திசாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மதவாச்சி தொடக்கம் தலைமன்னார் வரையிலான புகையிரதப் பாதையின் மொத்த நீளம் எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி புகையிரதப் பாதையை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) இதற்கு அமைவாக மேற்படி பாதையில் ஒரு கிலோ மீற்றரை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்டுள்ள பணத் தொகை அண்ணளவாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4676/ '13

13.

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச வைத்தியசாலைகளுக்கு மருந்து கொள்வனவு செய்யும் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை யாது;

(ii) இவற்றில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டுக் கம்பனிகளின் உள்நாட்டு பிரதி நிதிகளின் பெயர்கள் யாவை

என்பதை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) அரச வைத்தியசாலைகளுக்கு மருந்து கொள்வனவு செய்யப்படும் நாடுகள் யாவை;

(ii) கொள்வனவு செய்யும் மருந்துகளின் அளவுகளுக்கமைய முறையே அந்நாடுகளின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி நாடுகளில் தரத்தில் குறைந்த மருந்துகளை உற்பத்தி செய்யும் நாடுகள் யாவை

என்பதை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) கடந்த மூன்று ஆண்டுகளில் அரச வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்ட மருந்துகளில் உரிய தரம் இன்மையினால் வருடாந்தம் நீக்கப்பட்ட மருந்து வகைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) மருந்துப் பொருட்களுக்கான கொள்வனவுக் கட்டளை விடுக்கப்படுவதற்கு முன்னர் அரச ஆய்வுகூடங்களில் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டு அறிக்கை பெறப்படுகின்றதா;

(iii) கடந்த இரண்டு ஆண்டுகளில் தரத்தில் குறைந்த மருந்து வகைகளை இறக்குமதி செய்து கரைநிரல் பட்டியலில் (Black list) இடப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— 2014 நவெம்பர் மாதம் 03ஆம் திகதி திங்கட்கிழமை, 04ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 05ஆம் திகதி புதன்கிழமை, 07ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 08ஆம் திகதி சனிக்கிழமை, 10ஆம் திகதி திங்கட்கிழமை, 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 12ஆம் திகதி புதன்கிழமை, 13ஆம் திகதி வியாழக்கிழமை, 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 15ஆம் திகதி சனிக்கிழமை, 17ஆம் திகதி திங்கட்கிழமை, 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 19ஆம் திகதி புதன்கிழமை, 20ஆம் திகதி வியாழக்கிழமை, 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை மற்றும் 24ஆம் திகதி திங்கட்கிழமை ஆகிய நாட்களில் “ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2015)” இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களாகுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1) ,— 70(2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் “ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2015)” இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2014 நவெம்பர் மாதம் 03ஆம் திகதி முதல் 2014 நவெம்பர் மாதம் 21ஆம் திகதி வரை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.00 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 6.30 மணிக்கு 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் (5) ஆம் (6) ஆம் பந்திகள் தொழிற்படுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2) ,— 70(2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் “ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2015)” இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாளான 2014 நவெம்பர் மாதம் 24 ஆம் திகதி திங்கட்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப.12.30 மணி வரையும் மற்றும் பி.ப 1.00 மணி முதல் பி.ப 5.00 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2015) — (ஒதுக்கப்பட்ட ஆறாம் நாள்) — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஒற்றோபர் 24) [1].

* 2.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 3.

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 12.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1999 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் 2013.09.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2013.09.13 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 13.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின், 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப் பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 14.

சுகாதார அமைச்சர்,— அரச மருந்தகக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்-2011,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழில்நுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2014.01.21 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக் களுடனான அரச மருந்தகக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.04.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 15.

தொழிநுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க கைத்தொழிற்துறைக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமைய, 2013.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 சனவரி 01 ஆம் திகதி முதல் 2011 திசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிநுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 16.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 17.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.23 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 18.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கை கட்டளைகள் நிறுவகச் சட்டத்தின் 37(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 19.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.22 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 20.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் சட்டத்தின் 36(4) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.22 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 21.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை-2011,— 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபைச் சட்டத்தின் 29(5) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 22.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை-2011,— 1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அணுசக்தி அதிகார சபைச் சட்டத்தின் 34(2) ஆம் பிரிவிற்கமைய தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 23.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 24.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை-2011,— 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை புத்தாக்குநர் ஊக்குவிப்புச் சட்டத்தின் 27 ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 25.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆர்தர் சீ. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக் களுடனான நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

26.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

27.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

28.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

29.

மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

30.

கல்பவுருக்ஷ சங்வர்தன பதனம (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

31.

ஸிவ்முனி ஸே வெஹர பௌத்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

32.

பி. ஹரிசன் சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

33.

சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

34.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] ''சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக'' எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---